சுற்றறிக்கை எண்.3/முசெ/2020

உயர் கல்வித்துறை,
தலைமைச் செயலகம்,
சென்னை–9

நாள் 24.03.2020

பொருள் : உயர் கல்வித்துறை – கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கை –உயர்கல்வித் துறையின் கீழியங்கும் கல்வி நிறுவனங்களுக்கு 31.03.2020 வரை விடுமுறை அளித்தல் – தொடர்பாக.

பார்வை :அரசாணை (நிலை) எண்.,152, மக்கள் நல்வாழ்வு (ம) குடும்பநலத் துறை, நாள்: 23.03.2020

*****

பார்வையில் படிக்கப்பட்டுள்ள அரசாணையின் பத்தி (h) ல் கீழ்க்கண்டவாறு கல்வி நிறுவனங்களுக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளது.

“Para h) All teachers and staffs of all educational institutions shall work from home till 31.03.2020 except, where conduct of examinations / evaluation is required. This, however, will not apply to Tamil Nadu Dr.MGR Medical University, Medical Wing of Annamalai University, all (Government, Private, Self Finance, Deemed Universities), Medical, Dental and Nursing Colleges and these institutions will continue to function”.

அதன்படி, அனைத்துப் பல்கலைக்கழகங்கள், கல்லூரிகள் மற்றும் தொழில்நுட்பக் கல்வி நிறுவனங்களுக்கு கீழ்க்கண்ட அறிவுரைகள் வழங்கப்படுகிறது.

- ஆசிரியர்கள், ஆராய்ச்சியாளர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்கள் அனைவரும் தங்கள் வீடுகளிலிருந்து பணிபுரியலாம்.
- ஆசிரியர்கள் இந்த காலகட்டத்தில் வீட்டிலிருந்தபடியே கீழ்கண்ட வேலைகளை பார்க்கும்படி பணிக்கப்படுகிறது:
    - இந்த காலத்தில் கல்வி சம்பந்தப்பட்ட பணிகளையும், பாடத்திட்டம் மற்றும் அடுத்த பருவத்திற்கான முன்னேற்பாடுகளுக்கான ஆய்த்தப்பணிகளை செய்யவும்:
    - கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் அனைத்து விடுதிகளும் சுத்தம் செய்யப்பட்டு தயார்நிலையில் வைத்திருக்கவேண்டும்;
    - பதிவாளர்கள் / கல்லூரி முதல்வர்கள் / விடுதி காப்பளார்கள் எந்நேரத்தில் அழைத்தாலும் பதில் அளிக்கும் நிலையிலும், தேவையேற்பின் அரைமணி நேரத்தில் கல்லூரிக்கு வருகை புரியவேண்டிய தயார் நிலையிலும் இருக்க வேண்டும்.
    - கல்லூரிக்கு மிக அருகில் உள்ள ஆசிரியர் ஒருவர் விடுதி மற்றும் கல்லூரிக்கான சாவிகளை வைத்திருக்கவேண்டும்

.....2.....

- மாவட்ட ஆட்சியர் உங்களை தொடர்புகொண்டு சொல்லும் பணியினை உடனடியாக செய்து தரவேண்டும்

- மாவட்ட ஆட்சியர் அழைத்தால், அவர் அழைப்பவர் கண்டிப்பாக மாவட்ட ஆட்சியரின் வேண்டுகோளை ஏற்கவேண்டும். அவ்வாறு மறுப்பவர்மீது துறைரீதியான நடவடிக்கை எடுக்கப்படும்.

- விடுதியில் தங்கியிருக்கும் அயல்நாட்டு மாணவர்களுக்காக விடுதிகள், திறந்துவைக்கப்பட்டு அவர்களுக்கு ஏற்ற சுகாதாரப்பாதுகாப்பு நடவடிக்கைகளை எடுக்கவேண்டும்

- அனைத்து ஆசிரியர்கள் மற்றும் அலுவலகப் பணியாளர்களின் தொலைபேசி எண்களை அந்தந்த கல்லூரி மற்றும் பல்கலைக்கழகங்களில் அளிக்கவேண்டும். ஏதேனும் அவசரம் ஏற்பட்டால் உங்களை தொடர்புக்கொள்ளும் நிலையில் இருக்கவேண்டும்.

அபூர்வா
அரசு முதன்மைச்செயலர்
உயர்கல்வித் துறை

பெறுநர்
கல்லூரிக் கல்வி இயக்குநர்
தொழில்நுட்பக்கல்வி இயக்குநர்
அனைத்துப் பல்கலைக்கழகப் பதிவாளர்கள்

// உண்மை நகல் //

24/3/2020
பிரிவு அலுவலர்

24/3/20